எம்.சி.ஓ.பி எண்: 5268/2021 தேதி: 22.01.2026

எ,மசா. : 2

பெயர் : Jaswin Ratnasakar

த/பெ. : தங்கராஜ்

வயது : 27

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசராணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 7 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை பற்றி நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில்தான் காப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டு காயம்பட்ட நபர் 3–ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள காரணத்தினாலும் அடிப்பட்டு காயம்பட்ட நபர் 3–ம் தரப்பினர் என்பதாலும் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் பதில் உரையுடன் காப்பீடு , பதிவு சான்று, அவருடைய ஓட்டுநர் உரிமம்இணைத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவை ஆவணங்களாக குறியீடு செய்யப்படவில்லை. எங்கள் நிறுவனத்தில் சார்பாக புலன் ஆய்வு அதிகாரி ஆய்வு செய்து ஆவணங்கள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரி. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டிக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று கூறியுள்ளாரா என்றால் இருந்தது. அது விபத்து தேதியில் காலாவதி ஆகிவிட்டது. எங்கள் பதில் உரையில் இணைக்கப்பட்டுள்ள ஓட்டுநர் உரிமம் மற்றும் எங்கள் புலன் ஆய்வு அறிக்கையில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமம் 29.12.2026 ல் காலாவதி ஆகிறது என்றால் சரியல்ல. விபத்து நடந்த காலம் கோவிட் லாக்டவுன் காலம் என்றால் சரி. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் 25.08.2020 ல் காலாவதி ஆகியுள்ளது. அந்த காலமும் கோவிட் காலம் என்றால் சரி. கோவிட் காலத்தில் வாகன பதிவு சான்றிதழ், அனுமதி சான்று, தகுதி சான்று மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை

புதுப்பிப்பதற்காக பல்வேறு கால நீடிப்பு கொடுக்கப்பட்டு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரி. எந்த தேதி வரை நீடிக்கபட்டது என்று எனக்கு தெரியாது. கடைசி அரசணை படி 31.12.2021 வரை காலநீடிப்பு செய்யப்பட்டது என்றால் அது பற்றி தொியாது. எனக்கு தெரிந்துகொண்டே மனுதாரர் இழப்பீடு கொடுக்கக்கூடாது என்பதற்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்கும் பட்சத்தில் நாங்கள்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.